Registered as Newspaper

# உதயன்

| சுடர் : 36 கதிர் : 297 | வெள்ளிக்கிழமை | புரட்டாதி 08 ஆம் நாள் 24 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 |
|---|---|---|---|

பக்கங்கள்:16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 1,368 சாவு 72

கொழும்பு, செப். 24
இலங்கையில் நேற்று ஆயிரத்து 368 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் 12 >

### திலீபனுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்ட

## கஜேந்திரன் எம்.பியை இழுத்துச்சென்ற பொலிஸார்

### வாக்குமூலம்பெற்று பிணையில் விடுவித்தனர்



யாழ்ப்பாணம், செப். 24
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட நபர்கள் பொலிஸாரால் இழுத்துச்செல்லப்பட்டு, கைதுசெய்யப்பட்டநிலையில், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முற்பட் டபோதே, அங்கு நின்றிருந்த பொலிஸார், அவரை இழுத்துச்சென்று பொலிஸ் வாகனத்தில் 15 >

# நாட்டை முழுமையாக திறக்கவே வேண்டாம்!

### சுகாதாரத் தரப்பு பரிந்துரை

கொழும்பு, செப்ரெம்பர். 24
நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீக்கும்போது, நாட்டை முழுமையாகத் திறக்க வேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஜெனரல் ஹேமந்த ஹேரத் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
நாட்டை முழுமையாக ஒரே நேரத்தில் திறப்பதற்குப் பரிந்துரைக்கப்படவில்லை. நாடு முழுமையாகத் திறக்கப்படுமானால், 15 >

## க.பொ.த. சா/த. பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, செப். 24
கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.
பரீட்சைப் பெறுபேறுகளை, www.doenets.lk/examresults என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம். (த)

## நினைவேந்தலுக்கு யாழ்.நீதிமன்று தடை

யாழ்ப்பாணம், செப். 24
தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு யாழ்ப்பாண நீதிவான் மன்று தடை உத்தரவு வழங்கி 15 >

### கோவில் கும்பாபிசேகம்: மேலும் 25 பேருக்கு தொற்று உறுதி

வவுனியா, செப். 24
வவுனியா, ஓமந்தை, 15 >

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் சாவு மற்றொருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 24
யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.
வெற்றிலைக் 11 >

### கட்டுக்கதைகளை விடுத்து

## பிள்ளைகளுக்கு தடுப்பூசி போடுங்கள்

### விசேட மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை

கொழும்பு, செப். 24
கட்டுக்கதைகளுக்கு இரையாகாமல், பிள்ளைகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் பின்வாங்காது செயற்படுங்கள் என்று பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடம், விசேட மருத்துவ 15 >

## தமிழில்வரும் கடிதங்களுக்கே சபை நடவடிக்கை எடுக்கும்

### வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 24
வலி.மேற்கு பிரதேச சபைக்கு, அரச தரப்புகளிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் இனிமேல் தமிழ் மொழியிலேயே அனுப்பப்படவேண்டும். தமிழ் மொழியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கே சபையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.மேற்கு பிரதேச சபை அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்போது, குற்றத்தடுப்பு பிரிவினரால் சிங்கள மொழியில் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் 15 >

## ஐ.நாவில் நல்லிணக்கப் பேச்சு: இங்கு தமிழர்மீது அடக்குமுறை

### பிணையில் வந்த கஜேந்திரன் விசனம்

யாழ்ப்பாணம், செப். 24
நாட்டின் ஜனாதிபதி ஐ.நா.வில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போகின்றோம் என்று கூறுகிறார். ஆனால் எங்களுடைய உறவினர்களை, எங்களுக்காகப் போராடியவர்களை நினைவு கூருவதற்கான உரிமையைக்கூட வழங்க அவர் தயாரில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றுவதற்கு நான் தயாராகும்பொழுது அங்குநின்ற பொலிஸார் 15 >

### பொலிஸாரின் அடக்குமுறைகளுக்கு

## முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்

### கஜேந்திரன் கைதுக்கு சரவணபவன் கண்டனம்



யாழ்ப்பாணம், செப்.24
அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்தவருக்கு, அகிம்சை வழியில் அஞ்சலி செலுத்த முயன்றவர்கள் மீது பொலிஸார் அதிகார பலத்தைப் பிரயோகித்துள்ளனர். 11 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிப்புறப் பொறிமுறையை இலங்கை ஒருபோதும் ஏற்காது

## இந்திய வெளியுறவு அமைச்சருக்கு தெரிவித்தார் ஜி.எல்.பீரிஸ்

**கொழும்பு, செப்.24**



**நாடுகளுக்கு எதிரான தீர்மானங்கள் அந்த நாடுகளின் அனுமதியின்றி செயற்படுத்தப்பட முடியாது என்றும், வேறு எந்த வெளிப்புறப் பொறிமுறைகளையும் இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு சுட்டிக்காட்டினார் என்று வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்தல், கைதிகளாகவுள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்தல் மற்றும் காணாமல்போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் சபை போன்ற சுயாதீன நிறுவனங்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர் பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு விளக்கினார். பல முனைகளில் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும், முயற்சிகள் தொடர்கின்றன என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் பல்வேறு பகுதிகளில் முன்னேறுதற்காக வலுவான அரசியல் விருப்பம் உள்ளது என்றும் வெளிநாட்டு அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

நாடுகளுக்கு எதிரான தீர்மானங்கள் அந்த நாடுகளின் அனுமதியின்றி செயற்படுத்தப்பட முடியாது என்றும், வேறு எந்த வெளிப்புறப் பொறிமுறைகளையும் இலங்கையால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் வெளிநாட்டு அமைச்சர் வலியுறுத்தினார்.

இரு நாடுகளினதும் நலன் கருதி, இனப்பிரச்சினைகளுக்குப் பின்னர் எஞ்சியிருக்கும் பிரச்சினைகளுக்கு நியாயமான மற்றும் நீதியான தீர்வுகள் அவசியம் என அமைச்சர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார். பல்வேறு வழிகளில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா தயாராக உள்ளது என்றும் அமைச்சர் ஜெய்சங்கர் உறுதிப்படுத்தினார். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை விரைவுபடுத்தும் முகமாக, நிலுவையில் உள்ள ஒப்பந்தங்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர் என்றுள்ளது. (எ-இ)

## இரு அங்காடிகளில் திருடியவர் சில மணிநேரத்தில் சிக்கினார்!

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாணத்தில் உள்ள இரண்டு பிரபல அங்காடிகளில் திருடிய சந்தேக நபர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் சில மணிநேரத்தில் கைதுசெய்யப்பட்டார். வெளிநாட்டு இனிப்பு வகைகள் மற்றும் வெளிநாட்டு 'ஷம்போ' வகைகளை அவர் திருடியமை கண்காணிப்புக் கமராக்களின் பதிவுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குருநகரைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அவரிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன. (ம-26)

## மூன்றாம் தர காப்புறுதி மீதான வரியை அதிகரிக்க அரசு முடிவு

கொழும்பு,செப்.24

அனைத்து வாகனங்களுக்குமான மூன்றாம் தர காப்புறுதி மீதான வரியை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி மூன்றாம் தர காப்புறுதிக் ( Third Party Insurance) கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் வீதிப் பாதுகாப்பு நிதிக்கான வரியை ஒரு வீதத்திலிருந்து 2 வீதமாக அதிகரிக்க போக்குவரத்து அமைச்சர் முடிவு செய்துள்ளார்.

இது குறித்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி அதிகரிக்கப்பட்ட வரிக் கட்டணம் இவ்வாண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

# மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்தத் திட்டம்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு


கொழும்பு, செப். 24

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான நாடாளுமன்ற சிறப்புக் குழுவின் பொதுவான நிலைப்பாடு என அந்தக் குழுவின் தலைவர், சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலை விரைவில் நடத்த முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

'எங்கள் மக்கள் சக்தி கட்சி' நாடாளுமன்ற விசேட குழுவில் தனது கருத்துக்களை முன்வைத்ததுடன், இந்தக் கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர் குழு முன்னிலையில் முன்னிலையாகினார். தற்பொழுது நடைமுறையில் உள்ள விருப்புவாக்கு முறையை முழுமையாக நீக்குவது பொருத்தமானது எனச் சுட்டிக்காட்டிய அவர், தொகுதிக்குப் பொறுப்பான உறுப்பினர் இருப்பது அவசியமானது என்றும் தெரிவித்தார்.

சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். கொள்கை ரீதியாக அரசியலை முன்



னெடுக்கும் கலாசாரம் உருவாக்கப்பட வேண்டும். தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான அளவுகோல்கள் உருவாக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகளுக்கு ஜனநாயகத்தின் கோட்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அத்துரலிய ரதனதேரர் சுட்டிக்காட்டினார். தேர்தல் பிரசாரங்களுக்கான செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்குப் புதிய சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், இளையோர் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல்களில் போட்டியிடுவதற்கு இரட்டைப் பிரஜாவுரிமை தகுதியற்ற விடயமாக்கப்பட வேண்டும் என்றும், தகுதியுடைய சகல வாக்காளர்களையும் பதிவு செய்வதற்கு உரிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அஜித்.பி.பெரேரா இங்கு தெரிவித்தார். (ம)

# மன்னாரில் மின்தகன நிலையம் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்.செப்.24

மன்னாரில் மின் தகன நிலையம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னாரில் மின்தகன நிலையம் அமைப்பதற்கான எமது முயற்சிக்கு ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது. அதற்கான பணி துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

மன்னார் நகரசபையினர் மின் தகன நிலையத்துக்கான கட்டட செலவுகளை முழுமையாக ஏற்றுக் கொள்வதாக எம்மிடம் கூறியிருக்கின்றார்கள். மின்தகன நிலையத்துக்கான இயந்திரத் தொகுதியை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக கொடையாளர்களிடமிருந்து 21 லட்சம் ரூபா கிடைத்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி மிகவும் விரைவாக மின் தகன நிலையத்தை மன்னாரில் அமைப்போம் - என்றார். (ஐ-213)

## கொரோனாத் தொற்றுக்கு உள்ளான

# மனைவியைக் கொலைசெய்துவிட்டு மறுமணத்துக்கு தயாரானவர் கைது

கொழும்பு, செப். 24

கொரோனாத் தொற்றுக்குள்ளான தனது மனைவியைக் கொன்று விட்டு வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்யத் தயாரான நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சொத்துக்களைப் பெற்றுக்கொண்டு அவர் மறுமணத்துக்குத் தயாராகினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். மனைவியைத் தாக்குவதற்காகப் பயன்படுத்திய கத்தி, தலையணை மற்றும் படுக்கை விரிப்புகளையும் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான குறித்த பெண்ணின் மரணம் தொடர்பாக மேற்கொண்ட பிரேதப் பரிசோதனையில் மூக்கு மற்றும் வாய்ப் பகுதிகளை இறுக்கமாகப் பிடித்தமையால் சுவாசிக்கச் சிரமம் ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன் மனைவி உயிரிழக்க முன்னரே சந்தேக நபர் மலர்ச்சாலைக்குச் சென்று இறுதிச் சடங்கு மேற்கொள்வதற்கான பணத்தைச் செலுத்தியுள்ளமையும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மருத்துவமனையில்

# கொரோனா நோயாளரை பராமரிக்க உறவினர்களுக்கு அனுமதி

**வவுனியா,செப்.24**

**வவுனியா மருத்துவமனையில் கொரோனா நோயாளர்களை பராமரிக்க உறவினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வரும் நிலையில் உறவினர்கள் எவரும் அருகில் இருந்து பராமரிக்க அனுமதிக்கப்படுவதில்லை.**


இதனால் நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் அதிகளவான மன அழுத்தத்துக்கு உள்ளாகி வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுகாதார அமைச்சு இலங்கையில் முதற்கட்டமாக வவுனியா மற்றும் மொனராகலை மருத்துவமனைகளில் கொரோனா நோயாளர்களை பராமரிப்பதற்கு உறவினர்களுக்கு அனுமதி வழங்க திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி க. ராகுலனிடம் கேட்ட போது,

வவுனியா மருத்துவமனைக்கும் குறித்த நடைமுறை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து இந்த நடைமுறையை ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். நோயாளர்களின் உறவினர்களுக்கு ஒரு மணி நேர பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் கொரோனா விடுதிக்கு செல்வதற்கான பாதுகாப்பு அங்கிகள் முழுமையாக அணிந்து செல்ல அனுமதிக்கப்படுவர்.

அத்துடன் அனைத்து நோயாளர்களின் உறவினர்களையும் ஒரே தடவையில் அனுமதிக்க முடியாது. ஒரே தடவையில் மூவர் என்ற ரீதியில் அனுமதிக்கப்பட்டு அவர்கள் அனைத்து நோயாளர்களுக்கும் உதவும் வகையில் விடுதிக்குள் செல்வார்கள். இதனை ஒரு பொறிமுறையின் கீழ் செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம்- என்றார். (ஐ-110)



# நற்சான்றிதழ்களை கையளித்த மிலிந்த

கொழும்பு, செப்.24

அமைச்சரவை அந்தஸ்துடன் நியமிக்கப்பட்ட இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்திடம் தனது நற்சான்றிதழ்களைக் கையளித்தார்.

கொரோனாத் தொற்றுநோய் சூழ்நிலையில் நிறுவப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப, நற்சான்றிதழைக் கையளிக்கும் வைபவம் வெளிவிவகார அமைச்சில் மெய்நிகர் ரீதியாக இடம்பெற்றது. ராஷ்ட்ரபதி பவனில் இருந்து வெளியுறவு அமைச்சுடன் இணைந்துகொண்ட இந்திய ஜனாதிபதியிடம் மொரகொட தனது நற்சான்றிதழைக் கையளித்தார்.

இந்தியாவுக்கான இலங்கையின் இருபத்தி ஆறாவது தூதுவராக மிலிந்த மொரகொட நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த மஞ்சள், ஏலக்காய் மீட்பு

பூநகரி,செப்.24

பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 2 ஆயிரத்து 15 கிலோ மஞ்சள் மற்றும் 36 கிலோ ஏலக்காய் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கௌதாரிமுனை வெட்டுக்காட்டுப் பகுதியில் இருந்தே இவை நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

இராணுவ புலனாய்வுத்துறையினருக்கும் பூநகரி பொலிஸாருக்கும் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பெறுமதியான குறித்த பொருள்கள் மீட்கப்பட்டன. இதன்போது பூநகரி பரமன்கிராய் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-113)



# வீடுகளில் சிகிச்சை முறைமை வெற்றி

கொழும்பு,செப்.24

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, வீடுகளில் சிகிச்சை அளிக்கும் முறைமை வெற்றியளித்துள்ளது.

இதனால் இந்தவாரம் வீடுகளில் சிகிச்சை பெற்ற எவரும் உயிரிழக்கவில்லை என்று சுகாதார மேம்பாட்டு அலுவலகப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவண்துடாவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசன், மருத்துவமனைகளில் தற்போது சிகிச்சை பெற்றுவரும் கொரோனாத் தொற்றாளர்களுக்குப் போதுமானதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# பால்மா விலை இன்று முடிவு

கொழும்பு.செப்.24

பால்மா விலை அதிகரிப்பது தொடர்பில் இன்று வெள்ளிக்கிழமை முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பால்மா விலையை அதிகரிக்குமாறு அதன் இறக்குமதியாளர்கள் தொடர்ச்சியாக அரசைக் கோரி வருகின்றனர்.

அத்துடன் பால்மா இறக்குமதியை இடைநிறுத்தியதால் சந்தையில் பால்மாவுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் பால்மா விலைகளுக்கமைய தேசிய பால்மாக்களின் விலையை அதிகரிக்குமாறு உள்ளூர் பால்மா உற்பத்தி நிறுவனங்களும் கோரியுள்ளன. இது தொடர்பிலான இறுதித் தீர்மானங்கள் இன்று இடம்பெறவுள்ள வாழ்க்கைச் செலவுக் குழுக் கூட்டத்தில் எட்டப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். (4)

# கைதிகளை நிர்வாணமாக்கி சோதனையிடுவது வழமை

## சிறைச்சாலை பேச்சாளர் பதில்

கொழும்பு,செப்.24

சிறைக்கைதிகளின் ஆடைகளைக் களைந்து சோதனையிடும் முறைமை வழமையான செயற்பாடே என்று சிறைச்சாலை பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகள், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் நிர்வாணமாக்கப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சிறைச்சாலையில் அவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதை நான் அறியவில்லை. அந்த விவகாரம் ஆராயப்படும்.

தமிழர்கள் என இனரீதியில் வேறுபடுத்தி, நாம் ஒருபோதும் கைதிகளை நடத்துவது கிடையாது. போதைப்பொருள் தொடர்பிலான சோதனைகள் நடத்தப்படுமாயின், அனைவரிடமும் ஒரே விதத்தில் சோதனைகள் நடத்தப்படும். ஆடைகள் கழற்றப்பட்டு, சோதனைகள் நடத்தப்படும் . உலகிலுள்ள எந்தவொரு நாட்டிலும் அவ்வாறான சோதனைகளை நடத்த வேண்டாம் என்று கூறப்படவில்லை. சோதனைகளின் போது, கைதிகளின் ஆடைகளைக் கழற்றி சோதனை செய்வதற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் அதிகா

# கைகலப்பில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்.செப்.24

இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மதுபான நிலையத்துக்கு முன்பாக, நேற்று இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (4.125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாலயங்களுக்கு காணி வழங்குவதைவிட மக்களின் பசியாற்றுவதே மிகவும் முக்கியம்

## மன்னாருக்குச் சென்ற ஞானசாரதேரர் தெரிவிப்பு



**மன்னார், செப். 24**

**மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கோயில்மோட்டை பகுதியில் உள்ள அரச காணியை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்க தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வேன் என்று பொது பலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.**

நாட்டில் இருந்து கொரோனா முழுவதுமாக நீங்கவேண்டும் என்று மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தில் நேற்றுமுன்தினம் வழிபாடுகளை மேற்கொள்வதற்காக கலகொடஅத்தே ஞானசார தேரர் சென்றிருந்தார். அதன்போது மன்னார் கோயில்மோட்டைப் பகுதியில் உள்ள அரச காணியை தமக்கு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து உணவுத் தவிர்ப்பு உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுவரும் விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய தேரர் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டார்.

குறித்த காணிகள் தமக்கு வழங்கப்படுவதற்குப் பதிலாக ஆலயத்துக்கு வழங்கப்பட்டுவிட்டன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஞானசாரதேரர், தேவாலயங்களுக்கு காணிகளை வழங்குவதை விட மக்களின் பசியை தீர்ப்பதே முக்கியம். குறித்த காணியை கோயில்மோட்டை விவசாயிகளுக்குப் பெற்றுத்தர என்னால் இயன்ற நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ம-56)

---

*வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு*

# 3 மணித்தியாலத்தில் பி.சி.ஆர். சோதனை!

கொழும்பு, செப். 24

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கு 3 மணித்தியாலங்களில் பி.சி.ஆர். சோதனையை மேற்கொண்டு பெறுபேற்றை வழங்கக்கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்திலேயே இந்த ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி எதிர்வரும் சனிக்கிழமைக்கு முதல் இதனூடாகப் பி.சி.ஆர். நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (ம)

---

# உயிரிழப்பவர்களில் 89 வீதமானோர் தடுப்பூசியைப் பெறாதவர்களே

## *சுகாதாரப் பிரிவினர் தெரிவிப்பு*

வவுனியா,செப்.24

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களில் 89 வீதமானவர்கள் எந்தவித தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்களே என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவலடைந்து வரும் நிலையில், இறப்புக்களும் தொடர்கின்றன. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக வீடுகளில் இருப்பதன் மூலமே நிலமையை கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்களில் 89.25 வீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள். 10.75 வீதமானவர்கள் தடுப்பூசியின் ஒரு டோஸை மட்டும் பெற்றுக் கொண்டவர்கள். தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்ட எவரும் இதுவரை வவுனியாவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழக்கவில்லை.

20 வயதுக்கு மேற்பட்டோருக்கு தற்போது தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. எனவே தடுப்பூசியைப் பெற்று உங்கள் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் - என்றனர். (ஐ-18)

---



*நறுவிலிக்குளம் பகுதியில்*

# 68 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்பு

மன்னார்,செப்.24

பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 68 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகள் மன்னார் நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அச்சங்குளம்நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் இருந்தே கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த பொதிகள் வங்காலை கடற்படையினரால் மீட்கப்பட்டன.

இதன் போது சுமார் 228 கிலோ எடை கொண்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் இலங்கைப் பெறுமதி 68 மில்லியன் ரூபா என தெரியவந்துள்ளது.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.மேலதிக நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-56)

---

# குடும்பத்தகராறு காரணமாக சிறுவன் மீது தாக்குதல்

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக 14 வயதுச் சிறுவன் ஒருவன்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

தனிநபர் ஒருவர் தன் தாயை ஏசியதை அடுத்து ஆத்திரமடைந்த அந்தச் சிறுவன் நியாயம் கேட்பதற்காகச் சென்றுள்ளான். இதன்போதே அந்தச் சிறுவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது பின்னர் சிறுவன் நோயாளர் காவுவண்டி மூலம் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-113)

---

# பாடசாலைகளை மீள ஆரம்பிக்க பரிந்துரை

கொழும்பு,செப்.24

கொரோனாத் தொற்றுக் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை, நான்கு கட்டங்களாக மீள ஆரம்பிக்க முடியும் என்று சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சுக்குப் பரிந்துரைத்துள்ளது.

அதற்கமைவாக முதலாம் கட்டமாக முதலாம் தரம் முதல் 5 ஆம் தரம் வரையான 200 மாணவர்களுக்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட ஆரம்பப் பிரிவுகளை முதலில் ஆரம்பிக்கவேண்டும்.

இரண்டாம் கட்டமாக முதலாம் தரம் முதல் 5 ஆம் தரம் வரையான 200 மாணவர்களுக்கு அதிக மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளும், அனைத்துப் பிரிவுகளிலும் 100க்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் திறக்கப்பட வேண்டும்.

மூன்றாம் கட்டமாக அனைத்துப் பாடசாலைகளிலும் 10, 11, 12 மற்றும் 13 ஆம் தர வகுப்புக்களும், 200 க்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட அனைத்துப் பாடசாலைகளும் திறக்கப்பட வேண்டும், நான்காம் கட்டமாக அனைத்து வகுப்புக்களும் திறக்கப்பட வேண்டும். ஒரு கட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அடுத்த கட்டக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாயின், வைரஸ் தொற்றுத் தொடர்பில் ஆராயப்பட வேண்டும்.

அதேவேளை ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவோர் தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப் படவேண்டும். இது தொடர்பில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி தெளிவூட்ட வேண்டும்.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகளுடனான மாணவர்கள் அடையாளம் காணப்படும் பட்சத்தில், மேலதிக சிகிச்சைகளுக்காக பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய, சிறுவர் நோய் அல்லது தொற்று நோய் விசேட மருத்துவ நிபுணர்களிடம் காண்பிக்க வேண்டும். சிறார்களுக்கு அவசர சிகிச்சை வழங்கப்பட வேண்டுமாயின், உடனடியாக மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று சுகாதார அமைச்சு பரிந்துரை செய்துள்ளது. (ஒ-4)

---



# பாம்பாகிய இளைஞன்

வீதியால் சென்று கொண்டிருந்த இளைஞன் திடீரென பாம்பு போன்று படமெடுத்து, ஊர்ந்து செயற்பட்டது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

மட்டக்களப்பு நகரின் மத்தியில் காந்தி சதுக்கத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

முச்சக்கர வண்டியைச் செலுத்திச் சென்றவர், திடீரென்று இவ்வாறு நடந்து கொண்டமை அங்கிருந்தவர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. சுமார் ஒரு மணி நேரம் வரை இளைஞன் அவ்வாறு நடந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்த இளைஞனுக்கு 'தெய்வம் வந்துவிட்டது' என்று சிலரும், 'யாரே மாந்திரீகம் செய்துவிட்டார்கள்' என்று ஒரு சிலரும், 'பேய் பிடித்துவிட்டதன் விளைவு' என்று வேறு சிலரும் பேசிக்கொண்டனர். (ஒ-4)

---

# 100 மரக்கன்றுகள் அராலியில் நடுகை

யாழ்ப்பாணம், செப்.24

பீதாம்பரம் அறக்கட்டளை நிதியத்தின் மரம் நடுவோம் மண் வளம் காப்போம் என்னும் மகுட வாக்குக்கு அமைய 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில், அராலி ஜேம்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 100 மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

லயன் கலாநிதி கா. பீ. ஜெயவிந்தன் தலைமையில், காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும், உரும்பிராய் லயன்ஸ் கழகமும், இருபாலை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகமும் இணைந்து 100 பயன் தரும் மரக்கன்றுகளை நடுகை செய்தன. (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசை விமர்சித்த மஹிந்தவுக்கு எதிர்த் தாக்குதல்

**கொழும்பு, செப்.24**

**நல்லாட்சி அரசை, எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ச, கடுமையாக விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலடியாக அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் கருத்து வெளியிட்டுள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்குக் கடுமையாக உழைத்த தேரர்களில் பிரதானமானவரே முருத்தெட்டுவே தேரர். அரசியல் செயற்பாடுகளுக்காக விகாரையைக் கூட பயன்படுத்துவதற்கு இடமளித்திருந்தார்.

எனினும், தற்போது அரசின் பயணத்தை அவர் கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

"நாம் ஆட்சிக்குக் கொண்டு வந்த அரசா இது? இப்படியானதொரு அரசை நாம் எதிர்பார்க்கவே இல்லை.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைவர்கள் உறுதியளித்ததால்தான் அவர்களை ஆட்சிக்குக் கொண்டுவந்தோம்.

ஆனால் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. இதே வழியில் அரசு பயணித்தால் நாடு மிஞ்சுமா என்று தெரியவில்லை.

எனவே, பயணத்தை மாற்றி, மக்களுக்கான திசையில் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று தேரர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசின் போது, எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ச, ரணில் - மைத்திரி அரசை கடுமையாக விமர்சித்திருந்தார்.

பொருள்களின் விலை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில், தெங் செபத (இப்போது சுகமா) என்று பொதுக்கூட்டங்களின் போது அடிக்கடி வினா எழுப்புவார். 'தெங் செபத' என்ற சொற்பதமானது சமூக வலைத்தளங்களில் இன்றளவிலும் ஹிட்டாகவே உள்ளது.

எதிரணி உறுப்பினர்கள் கூட தற்போதைய அரசை விமர்சிப்பதற்கு இந்தச் சொற்பதத்தைப் பயன்படுத்துகின்றனர்.

அந்த வகையில் மஹிந்தவின் பாணியிலேயே அரசை விமர்சித்துள்ளார் முருத்தெட்டுவே தேரர். (ஒ-4-44)




## வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மன்னார், செப்.24

மன்னார் நகரப் பகுதியில் பாவனையாளர் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சீமெந்து பதுக்கல், பொருள்களை அதிக விலைக்கு விற்றமை உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபட்ட வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதி மக்களால் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மன்னார் அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த சுற்றிவளைப்பு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் நகரப் பகுதிகளில் குறிப்பாக சாந்திபுரம், தாராபுரம், தலைமன்னார் பிரதான வீதி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் சில வற்றுக்கு எதிராகவே வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை மன்னார் தலைமன்னார் முதன்மை வீதி பெரியகமம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகாமையில் உரிய அனுமதிப் பத்திரமின்றி சீமெந்து பதுக்கி வைக்கப்பட்ட களஞ்சியசாலை ஒன்று சீல் வைக்கப்பட்டது. (ஐ-56)

## வெடிபொருளுடன் விளையாடிய குழந்தைகள் பாதுகாப்பாக மீட்பு

சாவகச்சேரி, செப்.24

வீதி சீரமைப்புக்காக வெட்டப்பட்ட மண்ணுக்குள் இருந்து வெடிபொருள் படையினரால் மீட்கப்பட்டது. வெடிபொருளை வைத்து விளையாடிய மூன்று சிறுவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மட்டுவில் வடக்கில் அண்மையில் இடம்பெற்றது.

குறித்த பகுதியில் வீதி சீரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. சீரமைப்புக்காக தோண்டப்பட்ட மண் அயலில் உள்ள காணியில் குவிக்கப்பட்டிருந்தது.

மண்குவியலில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று குழந்தைகள் புதையுண்டு காணப்பட்ட வெடிபொருளை விளையாட்டுப் பொருளென எடுத்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் அந்த வழியே சென்ற வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்த ஒருவர் வெடிபொருளைக் கண்டு குழந்தைகளை அங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டு பொலிஸாருக்கும் படையினருக்கும் தகவல் வழங்கினார்.

அங்கு வந்த படையினர் அதிசக்தி வாய்ந்த வெடிபொருள் இது எனத் தெரிவித்து அதனை மீட்டுச் சென்றுள்ளனர். (ஐ-9-131)



## ஸார்ப் நிறுவனத்தால் இதுவரை 29,427 வெடிபொருள்கள் அகற்றல்

அதன் நடவடிக்கை முகாமையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப். 24

ஸார்ப் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தால் 2016 ஆம் ஆண்டு முதல் இதுவரை 29 ஆயிரத்து 427 அபாயகரமான வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று அதன் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற இராணுவ கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2021 செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும். கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை மற்றும் ஆனையிறவிலும் இருந்து 29 ஆயிரத்து 427 அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளது.

தொடர்ந்து இந்த நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றது. -என்றார். (ஐ-6)

# மோசடியாளர்களின் வலைக்குள் அரசு

## போட்டுடைத்தார் துஷான்

கொழும்பு, செப்.24

மோசடி செய்பவர்கள் விருப்பப்படியே அரசு செயற்படுகின்றது என்று நுகர்வோர் அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் துஷான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விரைவில் பால் மா, கோதுமை மா, சிமெந்து ஆகியவற்றின் விலையை அதிகரிக்கத் தயாராகிவருகின்றனர்.

சதொச நிறுவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட பெருமளவு பொருள்கள் சட்ட விரோதமான முறையில் வெளியேற்றப்பட்டன. சதொச நிறுவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட வெள்ளைப் பூண்டு சட்ட விரோதமான முறையில் வெளியேற்றப்பட்டு, குறித்த வியாபாரிகளிடமே மீண்டும் அதிக விலைக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

இந்தத் திருட்டை ஒழிக்கமுடியாது. மனதுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்மானத்தை எடுக்கமுடியாது.

பதவி விலகுவதற்கான தீர்மானத்தை எடுத்ததன் பின்னர் நிறுவனத்தின் வாகனத்தை நுகர்வோர் அதிகார சபையின் தலைவரிடம் ஒப்படைத்துள்ளேன். எனக்கு மரண அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சீனி, கோதுமை மா, உழுந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் மோசடியான முறையில் வெளியேற்றப்பட்டன. சதொச நிறுவனத்துக்குக் கொண்டு வரப்பட்ட பொருள்கள் தனிநபர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.



மோசடி செய்த நபர்கள் மீண்டும் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலை நடைமுறையில் இல்லை. சமையல் எரிவாயு சிலிண்டரில் ஏதோ விளையாட்டு இருக்கின்றது. -என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தொழிற்சந்தை மூலம் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்கள்

*சந்தர்ப்பத்தை தவறவிடவேண்டாம் என்று மன்னார் மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

மன்னார்,செப்.24

**மன்னார் மாவட்டத்தில் ஒக்ரோபர் 8 ஆம் திகதி ஒன்லைன் மூலமாக தொழிற்சந்தை வாரம் நடைபெறவுள்ளது. இத் தொழிற்சந்தை மூலம் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடும் எனவே இந்தச் சந்தர்ப்பத்தை எவரும் தவற விடாதீர்கள் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தெரிவித்துள்ளார்.**



மாவட்டச் செயலரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மனிதவலுவேலைவாய்ப்புத்திணைக்களத்தால் ஒக்ரோபர் 4 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதிவரை தொழிற்சந்தை வாரமாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு மாணவர்களின் ஆற்றல் திறனை அதிகரிக்கும் நோக்கில் கட்டுரை, பேச்சு மற்றும் கவிதை போன்ற போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய பாடசாலைகள் நடைபெறாத இந்த நிலைமையிலும் ஒன்லைனில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் மன்னார் மாவட்ட மாணவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இதேவேளை ஒக்ரோபர் 8 ஆம் திகதி ஒன்லைன் மூலமாக தொழிற் சந்தை வாரம் நடைபெறவுள்ளது. இந்தத் தொழிற் சந்தை மூலம் பல்வேறுபட்ட தொழில்கள் அதாவது வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

ஆகவே படித்துவிட்டு வேலை வாய்ப்புக்காக அலைந்து திரியும் எம் மாவட்ட இளையோர் இதில் பங்குபற்றி பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். இதற்கான மேலதிக தகவல்களை பெற பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டசெயலகத்தில் பணியாற்றும் மனித வலு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (ஐ-60)

## கொழும்புக் காணிகள் நீண்டகால குத்தகைக்கு

கொழும்பு, செப். 24

கொழும்பில் அமைந்துள்ள பெறுமதிமிக்க காணிகள் நீண்டகால குத்தகைக்கு விடப்படவுள்ளன. அதற்கமைவாக கொழும்பு டீ. ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள 3 காணிகளுக்கு விலை மனு கோரப்பட்டுள்ளது. இந்தக் காணிகளை 99 வருடங்கள் குத்தகைக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விளம்பரங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ளன.

கொழும்பு10 டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் இலக்கம் 12இல் அமைந்துள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபம் அமைந்துள்ள இடம், இலக்கம் 38இல் அமைந்துள்ள மக்கள் வங்கி கிளை அமைந்துள்ள இடம் மற்றும் இலக்கம் 40இல் அமைந்துள்ள சதொச களஞ்சிய அறை வளாகம் அமைந்துள்ள இடம் ஆகியவற்றையே குத்தகைக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-4)



## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 1,500 கிலோ கடல் அட்டைகள் மீட்பு

மன்னார், செப்.24

'மனோலி' தீவு வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்த ஆயிரத்து 500 கிலோ கடல் அட்டைகள் மற்றும் நாட்டுப்படகை இந்திய கடலோரக் காவல் படை மற்றும் வனவளத்துறை அதிகாரிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை பறிமுதல் செய்தனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட காவல்படை மற்றும் வனவளத்துறை அதிகாரிகள் மனோலி தீவு பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நின்ற நாட்டுப்படகை கைப்பற்ற முயன்றனர். இதனையடுத்து நாட்டுப்படகில் இருந்த 4 பேர் தப்பி ஓடினர். இதன்போது நாட்டுப் படகு மீட்கப்பட்டதுடன் அதிலிருந்து கடல் அட்டை மூடைகளும் கைப்பற்றப்பட்டன.

மூடைகளில் பதப்படுத்தப்படாத கடல் அட்டைகள் ஆயிரத்து 500 கிலோ இருந்த நிலையில் அவை மண்டபம் வனத்துறையினர் வசம் ஒப்படைக்கப்பட்டன. (ஐ-56)

## மயானக் கல்வெட்டில் 51 அரசியல்வாதிகள்

கொழும்பு, செப்.24

புதிதாகக் கட்டப்பட்ட மயானம் மற்றும் இறுதிச் சடங்குக் கட்டடத்தின் கல்வெட்டில், ஆளும் கட்சியில் உள்ள 51 அரசியல்வாதிகளின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

வெலிகம பிரதேச சபைப் பகுதியில் உள்ள வரகாபிட்டிய மயான கல்வெட்டிலேயே இவ்வாறு 51 பேரினது பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பெயரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4)



## மாணவிக்கு சைக்கிள் கையளிப்பு

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றின் மாணவிக்கு சைக்கிள் வழங்கப்பட்டது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றத்தின் ஒழுங்கமைப்பில் கனடாவைச் சேர்ந்த தெய்வேந்திர ஐயரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவி வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஆலயப் பரிபாலன சபை உபதலைவர் தெ.சசீந்திரன் ஐயா கலந்து கொண்டு சைக்கிளை வழங்கினார். இந் நிகழ்வில் கலாமன்ற போசகர்களான உதயராஜன் மற்றும் கனகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-26)



## 27 மாணவர்களுக்கு ரப் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.24

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் விடுதியில் தங்கியிருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் பொருண்மியம் நலிந்த 27 மாணவர்களுக்கு ரப் வழங்கப்பட்டது.

பாடசாலையின் சர்வதேச பழைய மாணவர் சங்கத்தால் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்த ரப்கள் வழங்கப்பட்டதுடன், அதற்குரிய மாதாந்த இணையக் கட்டண வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக வீட்டிலிருந்து நிகழ்நிலைத் தொழில்நுட்ப மூடாக தற்போது கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் குறித்த மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)

# வீட்டுக்குள் ஒளிந்திருப்பவர்களுக்கு நாட்டின் நிலைமை எப்படித் தெரியும்?

*அரசதரப்பு அமைச்சர் விசனம்*

கொழும்பு, செப். 24

கொரோனாத் தொற்றால் வீதிக்கு இறங்காமல் வீடுகளுக்குள் ஒளிந்திருக்கும் எதிர்க்கட்சியினருக்கு, நாட்டின் நிலைமை புரியவில்லை. தொற்றையும், அபிவிருத்தியையும் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யும் அரசை விமர்சிப்பது அவர்களுக்கு பழகிவிட்டது என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நியாயமான விசாரணைகள் இடம்பெறவேண்டும் என்பதற்காக விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர், தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலகியுள்ளார். கைதிகள் தெரிவிக்கும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து, விமர்சனங்கள் எழுந்தால், அதை உண்மை என்று ஏற்கமுடியாது.

அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்படும் அதிகாரிகளுக்கு அரசியல் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற முடியாதெனில் அவர்கள் பதவிவிலகலாம். தாம் வேலை செய்யவில்லை என்று புரிந்து கொண்டவர்கள் பதவி விலகுகின்றனர். பதவி வழங்குவதைப் போன்றே பதவியும் நீக்கப்படுவர். இது இந்த அரசில் மாத்திரம் இடம்பெறும் செயல் அல்ல. சிங்கப்பூர் பிரஜை ஒருவரை மத்திய வங்கி ஆளுநராக நியமித்து, பிணைமுறி மோசடி மூலம் மத்திய வங்கியை வெறுமையாக்க உதவிய கடந்த நல்லாட்சி அரசு, இன்று கப்ரால் நியமிக்கப்பட்டமையை விமர்சிக்கின்றது. ஆனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அனுபவம், தேர்ச்சி உள்ள ஒருவரையே ஆளுநராக இந்த அரசு நியமித்துள்ளது - என்றார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காலைச்சுற்றும் பெருவினா!

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பார்கள். அதற்காகத்தான் பொய்சொல்வதற்கு தனித்திறமை வேண்டும் என்பார்கள். என்னதான் பொய் சொல்வதில் கெட்டிக்காரனாக இருந்தாலும்கூட, ஓர் உண்மையை மறைக்கத் திட்டமிட்டு ஆயிரத்தெட்டு பொய்களை அவிழ்த்துவிட்டாலும் ஏதோவொரு பக்கத்தில் உண்மை வெளிப்பட்டே தீரும். கண்ணை மூடிக்கொண்டு வாய்க்கு வந்தவற்றை அவிழ்த்துவிடுவதில் ராஜபக்சக்கள் வல்லவர்கள். போர் நடைபெற்றபோது அப்பாவி மக்கள் கொல்லப்படவில்லை என்பது தொடக்கம் படையினரின் இழப்புவரை அவர்கள் சொன்னது முழுதுமே பொய்க்கணக்காகவே இருந்தது. ராஜபக்சக்களின் இந்தப் பொய்மையின் வரலாறு இன்று ஐ.நா. வரை நீண்டிருப்பதுதான் விசேசம்.

போர் மௌனிக்கப்பட்ட பின்னர் தமிழர் தேசத்தின் தலையாய பிரச்சினையாக இருப்பது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்தான். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்கள் பிள்ளைகளை மீளத் தரும்படி தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கின்றனர். ஆனால், இந்த விவகாரம்பற்றி கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம் சிங்கள ஆட்சியாளர்கள் சொல்கின்ற பதில் 'காணாமல் ஆக்கப்பட்டோர் என்று சொல்வோர் கனடாவிலோ இங்கிலாந்திலோ உல்லாசமாக இருக்கின்றார்கள்' என்பதாகவோ, 'அவர்கள் எல்லோரும் போரிலேயே உயிரிழந்து விட்டார்கள். படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டு விட்டனர்' என்பதாகவோதான் இருந்தது.

நல்லாட்சிக் காலத்திலேயே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் முடிவை சிங்கள தேசம் எடுத்துவிட்டது. ஆனால், கடும் எதிர்ப்புக் காரணமாக மேற்கொண்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. ஆயினும் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் மரணச் சான்றிதழ் கோசத்தைக் கையிலெடுத்தார்கள். இப்போது அதனை ஐ.நா. பொதுச் செயலர் முன்பாகவும் சொல்லிவிட்டனர்.

இறுதிப்போரிலும் அதற்கு முன்னரும் படையினரால் பிடிக்கப்பட்ட அல்லது உறவுகளால் ஒப்படைக்கப்பட்ட தமிழ் இளைஞர் யுவதிகள் அனைவரையும் போரிலே கொல்லப்பட்டோர் பட்டியலுக்குள் உள்ளடக்கி அவர்களுக்கான மரணச் சான்றிதழை வழங்கிவிட்டால் காணாமல் ஆக்கப்பட்டோர் என்ற விடயமே காணாமல்போய்விடும். இதுதான் ராஜபக்சக்களின் கணக்காக இருந்தது. அதனால்தான் காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கூறப்படும் அனைவருக்கும் மரணச் சான்றிதழை வழங்க சிங்கள தேசம் துணிந்தது. ஆனால், இந்தத் தீர்வின் இன்னொரு பக்கத்தைப் பார்க்க ராஜபக்சக்கள் மறந்துவிட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டிருந்தால், அவர்களைக் கொன்றவர்கள் யார்?. என்ற கேள்விக்கும் இந்த அரசு பதில் சொல்லவேண்டியிருக்கும். ஏனெனில் மரணச் சான்றிதழில் எவ்வாறு மரணம் சம்பவித்தது என்ற விடயம் பூர்த்தியாக்கப்படும்போது அரசதரப்பு அதற்குரிய காரணத்தை விளக்கியே ஆகவேண்டும். அதைவிட தங்களது உறவுகளை எந்தெந்தப் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம் என்று தமிழ் மக்கள் ஆதாரங்களை முன்வைத்திருந்தனர். எனவே அவர்களின் உறவுகளுக்கு மரணச் சான்றிதழ் வழங்கினால் அதற்கான பொறுப்பை குறித்த படை அதிகாரிகளே ஏற்கவேண்டும். அவ்வாறாயின் அத்தனைபேரையும் கொன்றொழித்த பொறுப்பும் குற்றமும் அந்தப் படையதிகாரிகளையும் அவர்களை வழிநடத்திய மேலதிகாரிகளையும் அவர்களுக்கு உத்தரவிட்ட அரசையும் சாரும்.

எப்படித்தான் கூட்டிக்கழித்துப் பார்த்தாலும் சுற்றிச்சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்தான் அரசு ஓடவேண்டியிருக்கும். மரணச் சான்றிதழைக் கொடுத்தோம் என்று காணாமல்போனோர் விவகாரத்தை அரசு கைகழுவினாலும் காணாமல் ஆக்கப்பட்டோரை கொன்றவர்கள் யார்? என்ற பெருவினா நச்சுப்பாம்பாக மாறி அதனின் காலைச் சுற்றிக்கொண்டே இருக்கப்போகின்றது.



# ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வாக்குறுதிகளை நிறைவேற்றார்!

### பிரதமர் மோடி தலையிடவேண்டும் பழ.நெடுமாறன் அழுத்தம் திருத்தம்

**கொழும்பு, செப். 24**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு தான் வழங்கிய வாக்குறுதிகளை கோத்தாபய ராஜபக்ச நிறைவேற்றுவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தியப் பிரதமர் மோடி கோத்தாபயவைச் சந்தித்து சிறையில் உள்ள கைதிகளை விடுவிக்க வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்தார் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் பல்வேறு நாட்டு அதிபர்களும், தலைமை அமைச்சர்களும் பங்கேற்கிறார்கள். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள கோத்தாபய 'விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டதற்காக நீண்டகாலமாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிப்பதில் தனக்கு தயக்கம் இல்லை' என்று ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் உறுதி அளித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

2009ஆம் ஆண்டில் போர் முடிந்த பின்னர் மறு ஆண்டான 2010ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. விசாரணை ஆணையம் அமைக்கப்படுவதாக அப்போதைய செயலாளர் நாயகம் பான்கிமூன் அறிவித்தார்.

ஆனால், இந்த விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மஹிந்த ராஜபக்ச மறுத்துவிட்டார். 2012ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையம் அளித்தப் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு மறுத்துவிட்டது. 2014ஆம் ஆண்டில் இலங்கை அரசின் போர் மீறல்கள் குறித்து சர்வதேச புலன்விசாரணை நடத்துவதற்கு ஐ.நா. மனித உரிமை ஆணையம் முடிவு செய்தது. ஆனால், இந்த விசாரணைக் குழுவைத் தனது நாட்டுக்குள் அனுமதிக்கவே ராஜபக்ச அரசு மறுத்துவிட்டது.

ஐ.நா.வையோ, ஐ.நா. மனித உரிமை ஆணையத்தையோ, அவற்றின் ஆணைகள் எதையுமோ சிறிதளவுகூட மதிக்காத ராஜபக்ச சகோதரர்கள் இனிமேலும் மதிப்பார்கள் என்பதை உலகம் நம்பவில்லை.

நாட்டிற்கு அவர் திரும்பிச் சென்ற பிறகு சிறையில் வாடும் தமிழர்களை விடுவிப்பார் என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் இல்லை.

எனவே, ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி, கோத்தாபயவிடம் ஐ.நா. பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தவேண்டும் - என்றார். (ம)

### பணிப்புறக்கணிப்பில் ஈடுபடாத

# ஆசிரியர்களை அச்சுறுத்தினால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை!

### அமைச்சர் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு, செப். 24

பெரும்பாலான ஆசிரியர்கள் கட்டாயத்தின் அடிப்படையிலேயே பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். பணிப் புறக்கணிப்பில் ஈடுபடாத ஆசிரியர்களை அச்சுறுத்தினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவது பொது மக்களின் ஜனநாயக உரிமையாக காணப்பட்டாலும் பெரும்பான்மையான ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் இணைந்து கொண்டிருப்பது அவர்களின் விருப்பத்துக்கன்றிக் கட்டாயப்படுத்தலுக்கே.

வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளிலும் கற்பித்தல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இன்று தெற்கிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மாத்திரமே அநாதரவாக உள்ளனர். இது மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும். அதனால் மாணவர்களின் எதிர்காலத்தினை கவனத்தில்கொண்டு கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு நான் ஆசிரியர்களை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தா நாடு திரும்பியதும் சிறைக்கைதிகள் விடுதலை?

## ஐ.ம.சக்தி கணிப்பு

கொழும்பு,செப்.24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐ.நாவிலிருந்து நாடு திரும்பியதும் சிறைக்கைதிகளை விடுதலை செய்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

2020 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை வெளிநாட்டிலிருந்து வந்த வைரஸால் நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், இந்த அரசு ஆட்சிக்கு வந்தது முதல் ராஜபக்ச உறவினர்களால் வந்த வைரஸால் மக்கள் இரண்டாவது முறையாகப் பாதிக்கப்பட வேண்டி இருக்கின்றது.

ராஜபக்ச அரச தரப்பினர் நாட்டின் பெரும் பகுதியைச் சீனாவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளனர். சங்ரிலா ஹொட்டல் பகுதி, துறைமுக நகரின் பெரும் பகுதி ஆகியவற்றை சீனாவுக்கு வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோர் அமெரிக்க பிரஜாவுரிமை கொண்டவர்கள். அவர்கள் நாட்டின் சொத்தை அமெரிக்காவிடம் ஒப்படைக்கின்றனர்.

இதன் உச்சமாக கடந்த வாரத்தில் இந்த நாட்டின் மொத்த மின் உற்பத்தி நிலையங்களதும் உரிமத்தை வெளிநாட்டவர்களுக்கு ஒப்படைத்து விட்டனர். ஆக மொத்தத்தில் சங்கைக்குரிய தேரர்களை ஏமாற்றி ஆட்சியைக் கைப்பற்றிய ராஜபக்ச அரசு இன்று மக்களையும் ஏமாற்றுகின்றது - என்றார். (ஒ-4-22)

# போராட்டங்களை ஒடுக்கவும் அவசரகாலச் சட்டம் வரலாம்

## முன்னிலை சோஷலிசக்கட்சி குற்றச்சாட்டு



**கொழும்பு,செப். 24**

**எதிர்காலத்தில் போராட்டங்களை ஒடுக்குவதற்காகவும் அவசரகாலச் சட்டத்தை அரசு பயன்படுத்தக்கூடும் என்று முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளதாம். பஸ்கள் மட்டும் தான் ஓடவில்லை. ஏனைய எல்லா விடயங்களும் இடம்பெறுகின்றன. எனவே, தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் என்பது நகைச்சுவைத்தனமாக மாறியுள்ளது. ஆரம்பத்தில் போராட்டங்களை ஒடுக்குவதற்கே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அரசு பயன்படுத்தியது. எனினும், அந்த முயற்சி கைகூடவில்லை.

தற்போது அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. உணவு விநியோகத்துக்கே அந்தச் சட்டம் எனக்கூறப்பட்டாலும் அதன் உண்மையான நோக்கம் எதிர்ககாலத்தில் தெரியவரும். ஜனாதிபதிக்குத் தேவையான வகையில் அந்தச் சட்டத்தை பயன்படுத்தலாம். குறிப்பாக போராட்டங்கள் ஒடுக்கப்படலாம்.

போராட்டம் நடத்த வேண்டியதில்லை. துண்டுப்பிரசுரம் விநியோகித்தாலும், போராட்டத்துக்கான அழைப்பு விடுத்தாலும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி கைது செய்யலாம். எனவே, அவசரகாலச் சட்டத்தை இந்த அரசு எவ்வாறு பயன்படுத்தும் என்பது எதிர்காலத்தில் தெரியவரும் - என்றார். (ஒ-4,44)

# 73,000 பேருக்கான நீர் விநியோகம் 'கட்'



கொழும்பு,செப்.24

ஆறு மாதங்களுக்கு மேலாக நீர்க் கட்டணத்தைச் செலுத்தாத சுமார் 73 ஆயிரம் பேருக்கான, நீர் விநியோகத்தை நிறுத்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது நுகர்வோரிடமிருந்து 145 கோடி ரூபா வருமதியாக உள்ளது. இதனால் சபை 800 கோடி ரூபா நிதியை இழந்துள்ளது.

6 மாதங்களுக்கு மேலாக நீர்க் கட்டணங்களைச் செலுத்தாதவர்களுக்கு குறுஞ்செய்தி வழியாக தகவல் அனுப்பப்பட்டுள்ளது. குறுஞ்செய்தி அனுப்பப்பட்டதன் பின் சுமார் 100 பேரே கட்டணத்தைச் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை சுற்றுலாத் துறையின் வீழ்ச்சியால், நாடு முழுவதும் உள்ள பல ஹொட்டல்களும் நீர்க் கட்டண்த்தைச் செலுத்தவில்லை.

எனவே நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு மாதந்தோறும் 2 பில்லியன் ரூபா செலவு ஏற்படுகின்றது. அதனால் கட்டணங்களை விரைவாகச் செலுத்துமாறு சபை வலியுறுத்தியுள்ளது. (ஒ-4)

# நெருக்கடிகளை விரும்பும் அரசு

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு,செப்.24

தற்போதைய அரசு சந்தித்துள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு இல்லை.எனினும் அரசு அதையே எதிர்பார்க்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எமது நாட்டில் ஒரு நெருக்கடி கீழே செல்லும் போது மற்றொரு நெருக்கடி மேலே வந்துவிடும். உதாரணமாக தேங்காய் எண்ணெய் நெருக்கடி. தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள் உள்ளன என்ற பிரச்சினையொன்று ஏற்பட்டது. ஆனால் இன்றும் மக்கள் தேங்காய் எண்ணெயில் சமைத்த உணவையே உட்கொள்கின்றனர். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் பரிசோதிக்கப்படுகின்றதா? இல்லை. இப்போது அந்தப் பிரச்சினை அங்கேயே முடிந்தது, புதிய பிரச்சினை தோன்றியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சா லைக்குள் புகுந்து ஆடிய ஆட்டம், மதுபானசாலைகளைத் திறந்த பின்னர் காணாமல் போய்விட்டது. எனவே இவை எல்லாம் வேண்டுமென்றே நடக்கும் சம்பவங்கள். இப்படி தான் ஒவ்வொரு பிரச்சினைகளும் காணாமல் போகும். சிறிய தீவான எமது நாட்டை பல மடங்கு பாதுகாக்கும் சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. தடுப்பூசி ஏற்றலில் குறைபாடு, உரிய நேரத்தில் நோயாளர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லாமை உள்ளிட்ட பல காரணங்கள் மனித உயிர்கள் இல்லாமல் போவதற்கு காரணமாக அமைந்துள்ளன- என்றார். (ஒ-4)

# வெலிக்கடை சிறைக்கு செல்லவேயில்லை

## முடிந்தால் நிரூபியுங்கள் என அழகி புஷ்பிகா சவால்

கொழும்பு, செப். 24

சிறைச்சாலைகள் விவகாரத்துக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயுடன் நான் வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றேன் என்று வரும் செய்திகள் தவறானவை. அவ்வாறு எந்தச் சிறைச்சாலைக்கும் நான் செல்லவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்களை வெளியிடுவோர் முடிந்தால் நிரூபித்துக்காட்ட வேண்டும் என்று புஷ்பிகா டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பவம் இடம்பெற்ற அன்று நான், கொழும்பில் இருக்கவில்லை. அன்றைய தினம் நான் மாத்தறையில் இருந்தேன். அதிவேக ரயிலில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்கள் மூலம் அதை உறுதிப்படுத்தலாம்.

எனக்கு எதிராகப் பெரும் சதித்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் உரிய சாட்சிகள் மற்றும் ஆதாரங்களுடன் தெரிவிக்க வேண்டும். அதைவிடுத்து ஒருவர் மீது ஆதாரமற்ற எந்தக் குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கக் கூடாது - என்றார். (ம)

### விவாதப் போட்டியில்

# வலி. மேற்கு பிரதேச சபை காலிறுதிக்கு தகுதி!

வலி.மேற்கு,செப்.24

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் விவாதப் போட்டியில் வலி.மேற்கு பிரதேசசபை காலிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து ஒவ்வொரு சபைகளுக்கும் ஒரு தலைப்பு என்ற அடிப்படையில் சூம் செயலி ஊடாக போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் ஆளுமை மற்றும் அறிவுத்திறனை விருத்தி செய்வதற்காக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி விவாதப் போட்டியின் இரண்டு சுற்றுக்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் இரண்டு சுற்றுகளிலும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் தங்களது அறிவு, விவாத, ஆளுமைத்திறனை வெளிக்காட்டி வெற்றி பெற்றுள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச சபை அணியில் தவிசாளர் த.நடனேந்திரன், உறுப்பினர்களான சி.பாலகிருஷ்ணன், ந.பொன்ராசா, து.சுஜிந்தன் மற்றும் கே. சுதர்சினி ஆகியோர் பேச்சாளர்களாக தமது திறமையை வெளிப்படுத்தினர்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வலி.மேற்கு பிரதேச சபை, வலி.தென்மேற்கு பிரதேச சபை மற்றும் நல்லூர் பிரதேச சபை ஆகியன காலிறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அந்த முடிவினால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். உடல்ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்**: புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்**: இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயல்படவேண்டிய நாள். முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துவிடுவது அவசியம். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்**: எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். முக்கியப் பிரமுகர் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**சிம்மம்**:புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி**: தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக்கசப்புகள் நீங்கும்.

**துலாம்**: பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்**: மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**தனுசு**: எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், பேசும் போது பொறுமை அவசியம்.

**மகரம்**: மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மறுப்பு சொல்லாமல் மகிழ்ச்சியுடன் வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்**: தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம்.

**மீனம்**: புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல்தொடங்கவும். குடும்பம்தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

# ஆப்கானிஸ்தானில் விரைவில் உள்நாட்டுப்போர் வெடிக்கும்!

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு



**இஸ்லாமபாத், செப். 24**
**ஆப்கானிஸ்தானில் விரைவில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார். அதைத் தவிர்ப்பதற்கு அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய ஆட்சியை தலிபான்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தலிபான்கள் மனித உரிமைகளை மதிக்க வேண்டும். ஆப்கான் மண்ணை பிற தீவிரவாத அமைப்புகள் அண்டைநாடுகள் குறிப்பாக பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு எதிராகப் பயன்படுத்தாமல் தடுக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சியை நல்க வேண்டும். இல்லாவிட்டால் விரைவில் உள்நாட்டுப் போர் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. அப்படியேதும் நடந்தால் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளுக்கு மட்டுமே உகந்த இடமாக மாறும். அது வேதனையான விஷயம் - என்றார். ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்று பிரதமர் இம்ரான் கான் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில், அதற்கு தலிபான்கள் மறைமுகமாகக் கண்டனம் தெரிவித்ததுடன், 'எந்த நாட்டுக்கும் கட்டுப்பட வேண்டிய தேவை தலிபான்களுக்கு இல்லை' என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 500 மில்லியன் தடுப்பூசிகளை பகிர்ந்தளிக்கிறது அமெரிக்கா




நியூயோர்க், செப். 24
வறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளுக்கு முற்றிலும் இலவசமாக 500 மில்லியன் தடுப்பூசிகளைப் பகிர்ந்தளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இதன்மூலம் உலகில் மிக அதிகளவு தடுப்பூசிகளை இலவசமாக வழங்கிய நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெறும்.
இது தொடர்பில் வெள்ளைமாளிகை அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,
அதிபர் பைடன் முறைப்படி மேலும் 500 மில்லியன் பைஸர் தடுப்பூசியை அமெரிக்கா கொள்முதல் செய்வதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவார். இதனால் 1.1 பில்லியன் தடுப்பூசியை தானமாக வழங்கிய முதல் நாடு என்று அந்தஸ்தை அமெரிக்கா பெறும். இந்தத் தடுப்பூசிகள் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.
இந்த அரை பில்லியன் தடுப்பூசிகளும் அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து அனுப்பிவைக்கப்படும்.
அடுத்த ஆண்டு செப்ரெம்பருக்குள் உலகம் முழுவதும் உள்ள குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு 800 மில்லியன் தடுப்பூசிகள் சென்றடையும் - என்றார். (ம)



சீனாவின்

# ஹார்பின் நகரில் ஊரடங்கு அமுல்

## கொரோனா பரவல் எதிரொலி

பீஜிங், செப். 24
சீனாவின் ஹார்பின் நகரில் கொரோனாத் தொற்று பரவ ஆரம்பித்ததை அடுத்து அங்கு மீண்டும் ஊடரங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
ஹார்பின் நகரின் மொத்த மக்கள் தொகை 10 மில்லியன்.
இங்கு இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் கொரோனா பரவியது. தற்போது இந்த மாதம் மீண்டும் தொற்று பரவ ஆரம்பித்துள்ளது.
நேற்றுமுன்தினம் 16 பேருக்குத் தொற்று அவதானிக்கப்பட்டதை அடுத்து அங்கு பகுதிநேர ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடந்த மூன்று தினங்களாக காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. பல ஏக்கர் காட்டுப்பகுதி எரிந்து சாம்பலானதுடன் காட்டுக்குள் இருந்த சுற்றுலாத்தலங்களும் எரிந்தழிந்துள்ளன. தீயைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ரூபாவின் பெறுமதி குறையும்?

கொழும்பு, செப். 24

நாட்டில் அதிகளவான பணம் அச்சடிக்கப்படுவதால், எதிர்காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடை யும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நிதிச் சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மக்களிடத்தில் மத்திய வங்கி கொள்ளையடிக்கின்றது. பெரும் தொகையில் பணம் அச்சிடப்படுகின்றது.



இது உள்நாட்டில் பணவீக்கத்தை அதிகரிக்கும். 85 கோடி ரூபாவுக்கு மேல் பணம் அச்சடிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலும் அச்சடிக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ரூபாவின் பெறுமதியை இன்னும் குறைக்கும் - என்றார். (ஓ-4)

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 05 . 1949

மறைவு 22 . 09 . 2021

### திரு. சண்முகராசா நாகேஸ்வரன்

தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சண்முகராசா நாகேஸ்வரன் கடந்த (22.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகராசா சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகனும், அரியமலரின் அன்புக் கணவரும், செல்வராணி, ஜெயமலர்தேவி (ஜேர்மனி), பத்மாவதி, காலஞ்சென்ற சோதிமலர் மற்றும் தனலக்சுமி காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும், சாந்தினி அவர்களின் அன்புச் சகோதரரும், ரேணுகா (கனடா), ரேகா, சுதன், குகானந்தன் (நிரோஜன்), கயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாகரன் (கனடா), வசீகரன், கஜேந்தினி, பிரவீனா, நிவேதா ஆகியோரின் அன்பு மாமனாரும், தஸ்மி (கனடா), சரண், அபிஷேக் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுகாதார முறைப்படி நாளை (25.09.2021) சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 332 4522

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 24 . 04 . 1947

மறைவு 06 . 10 . 2020

### அமரர் திரு. தம்பிஜயா கந்தசாமி

(இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

திதி: சங்கடஹர சதுர்த்தி [24.09.2021]

நெஞ்சமதில் நிலைத்து நின்று
எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

1ம் ஒழுங்கை,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## முதியவர்களுக்கு மதிய உணவு

யாழ்ப்பாணம்,செப்.24


சுழிபுரம் சோழபுரம் திருத்தொண்டர் பேரவை மூத்தோர் சங்கத்தால், முதியவர்களுக்கு மதிய உணவு வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சுழிபுரம் வாழ் பிரதேசமக்கள் மற்றும் புலம் பெயர் தேசத்து உறவுகளின் உதவியுடன் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ,போயா தினங்களிலும் மதிய உணவு வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொருண்மியம் நலிந்த 50 க்கும் மேற்பட்ட முதியவர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது, இதனால் காளுவன், பாண்டவெட்டை , காட்டுப்புலம், மற்றும் அயல் கிராமங்களில் உள்ள ஆதரவற்ற முதியவர்கள் பயனடைந்துள்ளனர். (ஓ-4,125)

# மரண அறிவித்தல்

## கனகலிங்கம் செல்வராஜா



பிறப்பு
05.05.1937

இறப்பு
23.09.2021

சீ.சீ.ரீ.எம்.எஸ் லேன் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் செல்வராஜா அவர்கள் நேற்று (23.09.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணமுத்து நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற சொர்ணம் அவர்களின் அன்புக் கணவரும், பார்த்தீபனின் (அமெரிக்கா) தந்தையும், சிந்துஜாவின் (அமெரிக்கா) மாமனும், மாதுளா, பாவலன் ஆகியோரின் அப்பப்பாவும், காலஞ்சென்ற இராஜரட்ணம், காலஞ்சென்ற துரைராஜா, திலகவதி, புனிதவதி, காலஞ்சென்ற புஸ்பவதி, தவராஜா (ஜேர்மன்), பகவதி (கனடா), உமாவதி ஆகியோரின் சகோதரனும், பிரான்சிஸ்கா (அவுஸ்திரேலியா), சுகிர்தலோஜினி (கனடா), காலஞ்சென்ற ரூபசிங்கம், கதிரவேலு, பத்மநாதன், வசந்தவேணி (ஜேர்மன்), இராஜகுலம் (கனடா), மகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீ.சீ.ரீ.எம்.எஸ். லேன்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
மகன்
075 0403 580
077 9021 326

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பக்க தொடர்ச்சிகள்....

*பொலிஸாரின் ...*

பொலிஸாரின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நல்லூரில் தியாகி திலீபனை அஞ்சலிக்க முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தமிழ் மக்களுக்காக அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த தியாகி திலீபனுக்கு, அமைதியான முறையில் அஞ்சலி செலுத்த முயன்ற நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உட்பட மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையைக் கேள்விக்குறியாக்கும் வகையில், அதிகார பலத்தைப் பிரயோகித்து, அவரைக் குண்டுக்கட்டாக தூக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். அஞ்சலிபதற்காக ஏற்றப்பட்ட சுடரை காலால் நசுக்கி அணைத்துள்ளனர். இவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் மக்களுக்கு நேசக் கரம் நீட்டுகிறார். ஆனால் நாட்டில் அரசும், அதன் ஏவலாளர்களும் தமிழ் மக்களை நசுக்கும் செயலிலேயே ஈடுபடுகின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கூட நாட்டில் மறுக்கப்படுகின்றது. அதன் ஒரு அங்கமே நாடாளுமன்ற உறுப்பினரின் கைது நடவடிக்கை.

குடாநாட்டில் வன்முறைகள், போதைப்பொருள் பாவனை என்பன தலைவிரித்தாடும் நிலையில், அவற்றையெல்லாம் கண்டும் காணாது இருக்கும் பொலிஸார், தமிழ் மக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ளும் போது பாய்ந்து விழுந்து அவற்றைத் தடுப்பதற்கு என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வது வழமையாகிவிட்டது. தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையை தடுப்பதற்கு கொரோனா நிலைமையைக் கையில் எடுக்கும் பொலிஸார், மதுக்கடைகளில் கூட்டம் திரளும்போது பாதுகாப்புக்கு நிற்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைகளைத் தடுப்பதில் காட்டும் அக்கறையைப் பொலிஸார், வன்முறைகளைத் தடுப்பதிலும், சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்துவதில் காட்ட வேண்டும். என்றுள்ளது.

*மின்னல்தாக்கி ...*

கேணி கோரியடி கடற்கரைப் பகுதி வாடியடி பகுதியில் கரைவலை தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே இரண்டு மீனவர்களும் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகினர். அதில், அதே பகுதியைச் சேர்ந்த ஜோன்தொம்சன் குயின்ரன் சுதர்சன் (வயது - 38) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

சடலம் மருதங்கேணி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த26,125)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 . 08 . 1952

மறைவு 24 . 09 . 2019



### செல்லர் இராசரத்தினம் (சுருளி)

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும்
உன் பிரிவால் மீண்டெழ முடியாமல் அன்னையவள் தவிக்கின்றேன்!
கண்ணை இமை காப்பதுபோல் என்னைக் காத்த என்னவரே!
என்னை விட்டு எங்கு சென்றீர்கள்?
நாள்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகியும்
உங்கள் நினைவுத் துயரிலிருந்து மீண்டெழ முடியவில்லை என்னால்.
உங்கள் கைபிடித்து கடைத்தெருவில் நடந்த உங்கள் மகனோ
அப்பா அப்பா என்று இன்னும் அழுகின்றான்.
உடன் பிறந்த உறவுகளோ இம் மண்ணில் உங்கள் நினைவால்
அனுதினமும் வாடுகின்றனர்.
ஆண்டிரண்டு ஆகியென்ன ஒரு யுகம் தான் ஆனாலும்
எம்முடலில் உயிர் இருக்கும்வரை உம் நினைவு அழியாதென்று
உம் உறவுகள் இங்கே அழுது புலம்புகின்றனர்.
கருணையில்லாக் காலனவன் உங்களை அழைத்தாலும்
உங்கள் ஆத்மா ஈடேற வேண்டுமென்றே எந்நாளும் வேண்டுகின்றோம்.


அரசடி வீதி, புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

ஜனனம் 08 . 07 . 1939

மறைவு 22 . 09 . 2021



### குமாரசாமி பொன்னம்பலம்

**(மருந்துக் கலவையாளர், பிலிப்ஸ் நேர்சிங் ஹோம், சென் லூர்ட்ஸ் நேர்சிங் ஹோம்)**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பொன்னம்பலம் நேற்று முன்தினம் (22.09.2021) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி பூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நேசம்மாவின் ஆருயிர் கணவரும், வாகீசன் (பிரதிப் பிரதம செயலாளர்- ஆளணியும், பயிற்சியும், வடக்கு மாகாண சபை), கேதீசன் (தொழிநுட்ப உதவியாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயதர்ஷினி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நளிந்தினி (ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகசிங்கம், சரவணமுத்து மற்றும் தையல்நாயகி (கனடா), சரஸ்வதிதேவி, பத்மாதேவி, புஸ்பதேவி, விஸ்வநாதன், சுசீலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவானுஜன், ஷ்ராங்கவி, கிருஷ்ணுஜன், குகேஷ், ஷகானி ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.09.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 386 8567
077 394 6501

## வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்

**கட்டடங்கள் திணைக்களம்,**
**வட மாகாணம்,**

வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலக பயன்பாட்டிற்கு 30/09/2016ற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் ஆறு மாதங்களுக்கு வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களினை வடமாகாண கட்டடங்கள் திணைக்களம் கடற்கரை வீதி, குருநகர் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட்டு 27.09.2021 – 01.10.2021 வரை அலுவலக நேரத்தில் நிதிக்கிளையில் ரூபா.500.00 (மீள்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 04.10.2021ஆந் திகதி பிற் பகல் 03.00 மணிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:-**

மாகாணப் பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம்,
வட மாகாணம் - 0212228091

**தலைவர்/மாகாணப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,**
**கடற்கரை வீதி, குருநகர்.**

## 1ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

### திருமதி சௌபாக்கியலட்சுமி கனகசபாவதி



தோற்றம் 16 . 12 . 1943

மறைவு 05 . 10 . 2020

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது
உங்கள் நினைவு.
உங்களின் ஆத்மா
இறைபாதம் சரணடைய
பிரார்த்திப்போமாக
ஓம் சாந்தி!

சகோதரர்கள்
இணுவில் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி தமிழினி பிரபாகரன்

**(அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம், உடுவில்)**



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் 2019/2020 ஆண்டு நிர்வாக சபையில் எம்முடன் பொருளாளராக இருந்து சிறப்பாகச் செயற்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியருமான **திரு.வையிரவப் பிள்ளை பிரபாகரன்** அவர்களின் அன்பு மனைவி அமரர் தமிழினி பிரபாகரன் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், செயலாளர்,**
**(முன்னாள்)**
**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் தாய்ச்சங்க 2019/2020 நிர்வாகம்.**

தொற்று ...

அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 10 ஆயிரத்து 40 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 16 ஆயிரத்து 720 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 742 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 72 பேர் சாவடைந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 448 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 72 பேரில் 30 பெண்களும் 42 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-22)

**தேவை**

மில்லில் பொதி செய்வதற்கு பெண்கள் தேவை.
இங்கு உழுந்து உடைத்து கொடுக்கப்படும்.
**தொ.பே.இல.: 077 772 2215**

# கேள்வி அறிவித்தல்.

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

# சபை நிதி - 2021

01. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சபை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) ற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்பு, கட்டிட நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 28.09.2021 ஆம் திகதியில் இருந்து 11.10.2021 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 28.09.2021 ஆம் திகதியிலிருந்து 11.10.2021 ஆம் திகதி வரையுள்ள வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 12.10.2021 ஆம் திகதி பி.ப 12.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி பிணை வைப்புத் தொகை என்பன கீழே அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 04.10.2021 ஆம் திகதி பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. மேற்படி கேள்வி கோரல் தொடர்பில் வலி கிழக்கு பிரதேச சபையின் பெறுகை குழுவின் முடிவே இறுதியானது. பெறுகை குழுவின் முடிவு தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. **கேள்வி ஆவணங்களை வழங்கும்போது கொரோனா (COVID 19) வைரஸ் தொற்றுத்தொடர்பான சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்தும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும், கேள்வி ஆவணங்களை பெறவரும்போது கூட்டமாக வருவதை தவிர்த்து ஒருவர் மட்டும் வருகை தரவேண்டும், சுகாதார முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் வருகை தர வேண்டும்.**

| | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடி யாகும் நாட்கள் | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(13)/2/Council/PI/01/2021 | நாச்சிமார் வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், தம்பாலை | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,400/- | 2022.01.08 |
| 02 | NP/14/41(13)/2/Council/PI/02/2021 | தையப்புல வீதி 1ம் ஒழுங்கை திருத்தம், கதிரிப்பாய் | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,430/- | 2022.01.08 |
| 03 | NP/14/41(13)/2/Council/PI/03/2021 | விக்னேஸ்வரா வீதி 1ம், 2ம் உப ஒழுங்கை திருத்தம், அச்சுவேலி தெற்கு | 0.85 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,510/- | 2022.01.08 |
| 04 | NP/14/41(13)/2/Council/PI/04/2021 | வல்லை மயான வீதி திருத்தம், அச்சுவேலி வடக்கு | 9.04 | 90 நாட்கள் | C7/C6 (Highways) | 118 நாட்கள் | 90,360/- | 2022.02.07 |
| 05 | NP/14/41(13)/2/Council/PI/05/2021 | கந்தவளவு வீதி திருத்தம், ஆவரங்கால் கிழக்கு | 0.91 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 9,200/- | 2022.01.08 |
| 06 | NP/14/41(13)/2/Council/PI/06/2021 | விக்னேஸ்வரா கல்லூரி பின் வீதி திருத்தம், வாதரவத்தை | 1.33 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 13,370/- | 2022.01.08 |
| 07 | NP/14/41(13)/2/Council/PI/07/2021 | கிந்துசிட்டி மாதிரி கிராம வீதி திருத்தம் - கட்டம் 3, புத்தூர் வடக்கு | 1.97 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 19,770/- | 2022.01.08 |
| 08 | NP/14/41(13)/2/Council/PI/08/2021 | பொக்கனை வீதி 4ம் ஒழுங்கை திருத்தம், ஊரெழு | 0.57 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 5,780/- | 2022.01.08 |
| 09 | NP/14/41(13)/2/Council/PI/09/2021 | தம்பசிட்டி 2ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,450/- | 2022.01.08 |
| 10 | NP/14/41(13)/2/Council/PI/10/2021 | பலாலி வீதி 6ம் ஒழுங்கை திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 1.67 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 16,720/- | 2022.01.08 |
| 11 | NP/14/41(13)/2/Council/PI/11/2021 | தம்பசிட்டி வீதி திருத்தம், உரும்பிராய் கிழக்கு | 0.82 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8.230/- | 2022.01.08 |
| 12 | NP/14/41(13)/2/Council/PI/12/2021 | மகிழடி வீதி திருத்தம், கோப்பாய் வடக்கு | 1.84 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 18,460/- | 2022.01.08 |
| 13 | NP/14/41(13)/2/Council/PI/13/2021 | முனிகோவில் வீதி 2ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.64 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,460/- | 2022.01.08 |
| 14 | NP/14/41(13)/2/Council/PI/14/2021 | கல்லுண்டாய் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.80 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 8,070/- | 2022.01.08 |
| 15 | NP/14/41(13)/2/Council/PI/15/2021 | நாயன்மார்கட்டு செம்மணி வீதி உப ஒழுங்கைகள் திருத்தம், கல்வியங்காடு | 0.63 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,370/- | 2022.01.08 |
| 16 | NP/14/41(13)/2/Council/PI/16/2021 | கோட்டைக்காடு 1ம் ஒழுங்கை திருத்தம், கோப்பாய் தெற்கு | 0.62 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 6,210/- | 2022.01.08 |
| 17 | NP/14/41(13)/2/Council/PI/17/2021 | கோப்பாய் உப அலுவலகம் மற்றும் நூலகம் மற்றும் மதில் திருத்தம், கோப்பாய் | 11.76 | 90 நாட்கள் | C6/C5 | 118 நாட்கள் | 117625/- | 2022.02.07 |
| 18 | NP/14/41(13)/2/Council/PI/18/2021 | இருபாலை முன்பள்ளி திருத்தம், இருபாலை | 7.28 | 90 நாட்கள் | C6/C5 | 118 நாட்கள் | 72830/- | 2022.02.07 |
| 19 | NP/14/41(13)/2/Council/PI/19/2021 | பகவான் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 1.47 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 14,750/- | 2022.01.08 |
| 20 | NP/14/41(13)/2/Council/PI/20/2021 | கல்வியல் கல்லூரி (வடக்கு) பின் வீதி திருத்தம், கோப்பாய் தெற்கு | 2.17 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 21,710/- | 2022.01.08 |
| 21 | NP/14/41(13)/2/Council/PI/21/2021 | பரலோகமாதா மயான திருத்தம், நீர்வேலி வடக்கு | 0.36 | 60 நாட்கள் | C9 / C8 (Highways) | 88 நாட்கள் | 3695/- | 2022.01.08 |

**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**
**யாழ்ப்பாணம்.**
**வடமாகாணம்.**
**2021.09.22**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு.வினாயகர் பாலரத்தினம்



சங்கானை, தொட்டிலடியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. வினாயகர் பாலரத்தினம் அவர்கள் கடந்த (22.09.2021) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வினாயகர்-சேதுப்பிள்ளை தம்பதியரின் ஆசை மகனும், ராஜமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பிராசா, செல்வராசா, குணராசா, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரஞ்சிதமலர், பூலோகநாயகி, காலஞ்சென்ற நாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தி, சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வன்னியசிங்கம், ஜெயமூர்த்தி ஆகியோரின் அருமை மாமனாரும், நடனசுரேஸ், தர்சினி, கௌரி, குமுதினி ஆகியோரின் பெரிய தந்தையும், மயூரன், சின்னவன், காலஞ்சென்ற குட்டி, கண்ணா, ரூபா, மனோஜ், கஜானன், கஜேதன், ரஜி, தர்சிகா, பிரியா, ஜனா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஸ்வின், கவின், சாத்விகா, அக்சிரா ஆகியோரின் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பேரன் மயூரன் (கனடா)**
**0016472017576**

**தொடர்புகளுக்கு:**
**வசந்தி - 077 922 4663**
**கௌரி - 077 672 6047**
**ஜெயந்தி- 075 226 3574**
**(மகள்மார்)**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## திரு.கந்தசாமி சாந்தகுமாரன்

**(ஓய்வுபெற்ற யாழ் மாநகரசபை தீயணைப்பு பொறுப்பதிகாரி)**



**மலர்வு : 07.02.1952** **உதிர்வு : 23.09.2021**

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தசாமி சாந்தகுமாரன் அவர்கள் நேற்று (23.09.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி சரஸ்வதி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற முத்து சத்தியபாமா தம்பதியரின் அன்பு மருமகனும், சுப்புலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், தேவகுமாரன் (Rex ஸ்ரூடியோ), லிங்ககுமாரன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும், தங்கராணி, மதிவதனி ஆகியோரின் மைத்துனரும், காயத்திரி (ஆசிரியர், யா/பெரியபுலம் மகாவித்தி யாலயம்), கங்கா, சிவாஜினி, சாந்தினி (ஆசிரியர், கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்), மணிகண்டன் (கவியரசு நகைப்பூங்கா), அபிராமி, செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காந்தன், திருமாறன் (பிரபு-இராஜேஸ்வரி திருமண மண்டபம்), சசிகுமார் (சசி), கீர்த்திசிங்கன் (கீர்த்தி), திவ்யா, கோபிநாத் (கோபி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஜகீசன், லாவர்ணன் ஆகியோரின் பெரிய தந்தையாரும், சபரீஸ், லவராஜ், லக்ஸ்மி, மகாலக்ஸ்மி, தனுசன், பிரணவி, கஜனிகா, கிஷான், வர்ணஜா, தனுஸ்கரன், திருக்கார்த்திக், தருணிகன், குருபரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (26.09.2021) ஞாயிற்றுக்கிழமை கோவிட் - 19 காலச்சூழ்நிலை காரணமாக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாச்சிமார் கோவிலடி.**
**0777 448 247**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில்
31 . 12 . 1937

விண்ணில்
23 . 09 . 2021

## திரு. அருளப்பு பிரான்சிஸ் குணரத்தினம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் சங்குவேலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அருளப்பு பிரான்சிஸ் குணரத்தினம் அவர்கள் நேற்று (23.09.2021) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற விக்ரோறியா ராணியின் பாசமிகு கணவரும், ஜேம்ஸ்பஸ்ரியன் (ஆசிரியர், யா/ மாதகல் சென் ஜோசப் கல்லூரி), ஜோன் அல்போன்ஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெஸ்மின் ஜெபநிதி (ஆசிரியர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), விஜிதா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சலோ மத்தியூ, ஜரீன் ஜஸ்டினா, லிரோன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான கிறேஸ் சுகுணமலர், ஞானப்பிரகாசம், விஜயரத்தினம் மற்றும் டெய்சிமலர், ஜெயராசா, ஜோன்மேரி செலஸ்டின்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சங்குவேலியிலுள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (24.09.2021) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நல்லடக்க ஆராதனை இடம்பெற்று மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல. 72, சங்குவேலி,**
**மானிப்பாய்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**ஜேம்ஸ் - 077 900 3179**
**அல்போன்ஸ் - 077 778 1480**

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
06 . 09 . 1938

விண்ணில்
30 . 09 . 1996

## அமரர். ஏகாம்பரம் பாலையா

திதி : சதுர்த்தி (24.09.2021)

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே அப்பா!
கண்மூடி முழிக்கு முன்னே
இருபத்து ஐந்து ஆண்டுகள் கழிந்து விட்டது அப்பா!
ஆனாலும் நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து
விட்டீர்கள் என்ற செய்தி இன்றும் எம் இதயங்களை
இரணமாக்குகின்றது அப்பா!
நீங்கள் எங்களுடன் தான் இருக்கின்றீர்கள் என்ற
நினைவில் என்றும் வாழ்வோம் அப்பா!
இன்னோர் பிறப்பு உண்மை எனில் அப்போதும்
நீங்களே எங்கள் அப்பாவாக வரவேண்டும் என்ற
வரத்தையே வேண்டுகின்றோம் அப்பா!
ஆண்டவன் திருவடியில் உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.!

**20, அரசடி ஒழுங்கை**
**K.K.S, வீதி,**
**யாழ்ப்பாணம்**

உங்கள் பிரிவால் வாடும்
**மகன், மகள்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர்
## சண்முகம் சதீஸ்குமார்

(சீதா நகைக்கடை உரிமையாளர்
- சாவகச்சேரி)

பிறப்பு
25.11.1974

இறப்பு
25.08.2021

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமது வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே உங்கள் சிரித்த முகமும், கனிவான பேச்சும் பண்பான செயலும், அழகிய தோற்றமும் எமது கண்முன்னே நிழலாடுகிறதே இவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் எம்மை விட்டுப் பிரிவீர்கள் என நாம் கனவிலும் நினைக்கவில்லை எங்கள் உயிர் உள்ளவரை அழியாது உங்கள் நினைவு தினம் தினம் உங்கள் நினைவில் எங்கள் கண்ணீர் தான் கரைகிறது நீங்கள் காட்டிய பாதையில் நாம் எமது மிகுதி பயணத்தை தொடர்கின்றோம் உங்கள் ஆத்மா செருகல்பதியான் திருவடியில் சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குடும்பத்தினர்.**

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை ...

நிலைமை இன்னும் மோசமாகும்.

எனவே, படிப்படியாக நாட்டைத் திறப்பதே மிகவும் பொருத்தமானது. இதன்மூலமாக, கொரோனா பரவலுக்கு வழிவகுக்கும் காரணிகள் உள்ளனவா என்று நாம் அவதானிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், இதுவரையான முடிவின்படி எதிர்வரும் முதலாம் திகதி அதிகாலை 4 மணியுடன் நீக்கப்படுகின்றது. முதலாம் திகதிக்குப் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடிக்கும் வாய்ப்பு இல்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு முன்னரே அறிவித்துள்ளது.

இந்தநிலையிலேயே, ஊரடங்கை நீக்கும்போது நாட்டை முழுமையாகத் திறக்க வேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (த-இ)

## க. ஜேந்திரன் எம்.பியை ...

ஏற்றினர். அவருடன் சென்றிருந்த முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்டனர்.

திலீபனின் நினைவிடத்தில் நேற்றுத் தொடக்கம் பொலிஸாரும் படையினரும் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்ட நபர்கள், நினைவிடத்தில் நேற்று அஞ்சலி செலுத்த முற்பட்டபோது, பொலிஸார் அதனைத் தடுத்தனர்.

நீதிமன்றத் தடையுத்தரவின்றி தன்னைத் தடுக்க முடியாது என்றுகூறிய கஜேந்திரன், தடைகளை மீறி அஞ்சலி செலுத்த முற்பட்டவேளை, பொலிஸார் அவரை இழுத்துச்சென்று தமது வாகனத்தில் ஏற்றினர். அவருடன் சென்றவர்களையும் கைதுசெய்து வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி சிலரை ஒன்று திரட்டி நினைவேந்தல் நிகழ்வை நடத்தினார் என்ற அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்ட மூவருக்கும் பி அறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையில், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மூவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 27ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுமாறு அறிவுறுத்தப்பட்டு அவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

**யாரையும்**
**தாக்கவில்லை**

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் கேட்டபோது, "கொரோனா விதிமுறை மீறல் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலேயே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், எவரையும் நாங்கள் தாக்கவில்லை." என்று தெரிவித்தனர். இதேவேளை, திலீபன் நினைவேந்தலை தடுக்கும்பொருட்டு பொலிஸார் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளமையால், அந்தப் பகுதியில் அச்சமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில், உணவு ஒறுப்பை ஆரம்பித்த தியாக தீபம் திலீபன், 11ஆவது நாளான, செப்ரெம்பர் 26ஆம் திகதி உயிர்நீத்தார்.

அவரது தியாகத்தை நினைவுகூரும் வகையில், உணவு ஒறுப்பை ஆரம்பித்த 34ஆவது ஆண்டு நினைவுவாரம் கடந்த 15ஆம் திகதி நல்லூரில் உள்ள திலீபனின் நினைவிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் நினைவேந்தல் தூபிக்குச் சென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், ஈகைச்சுடரேற்றி திலீபனின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-20,26)

## நினைவேந்தலுக்கு ...

க் கட்டளையிட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில், எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடத்த ஏற்பாடாகியுள்ள 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிடுமாறு யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸார், நீதிமன்றில் நேற்று விண்ணப்பம் செய்தனர்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினரான திலீபனை, நினைவுகூரும் நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அத்துடன், நாட்டில் நிலவும் கொரோனா பரவல் காரணமாக நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய நிகழ்வுகளை நடத்த முடியாது. எனவே, திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்கவேண்டும் என்று பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

அந்த விண்ணப்பத்தை ஏற்று, நீதிமன்று நினைவேந்தலுக்குத் தடை விதித்தது. எனினும் தடைக் கட்டளையில் எவருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை. (த-26)

## மேலும் 25 பேருக்கு ...

நொச்சிக்குளம் சித்தி விநாயகர் கோவிலில் சுகாதார அறிவுறுத்தல்களைமீறி நடைபெற்றதாகக் கூறப்படும் கும்பாபிசேக நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், 13 பேருடன் மேலும் 25 பேருக்குத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முதலில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 13 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதனையடுத்து, அந்தத் தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். கோவில் மற்றும் 30 வீடுகளும் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில் மேலும் 25 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. தற்போது குறித்த கிராமம் அச்சுறுத்தல் மிக்கதாக மாறியுள்ளது. எனவே, மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி அவதானமாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (த-18)

## பிள்ளைகளுக்கு ...

நிபுணர்கள் கோரிக்கை விடுத்தனர்.

விசேட மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகளுக்கமையவே, உலகிலும் எமது நாட்டிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனால், தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் வீண் அச்சங்கொள்ளத் தேவையில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில், சிறுவர் நோயியல் விசேட மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டு, சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் கருத்துரைத்தனர். அதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில்,

எதிர்வரும் நாள்களில், நாட்டின் அனைத்து மாகாண, மாவட்ட மற்றும் ஆதார மருத்துவமனைகளிலும், சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலுக்குரிய திட்டமிடல்கள், விசேட மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகளுக்கமைய மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலானது, மூன்று படிமுறைகளின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி, 12 - 19 வயதுக்கிடைப்பட்ட நாள்பட்ட நோய்களுடைய சிறுவர்களுக்கு முதற்கட்டத் தடுப்பூசி ஏற்றல் இடம்பெறும். 15 - 19 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்கு, அடுத்தகட்டமாகத் தடுப்பூசி ஏற்றப்படும். இந்த நடவடிக்கை, வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்துடன், 12 - 15 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம், மூன்றாவது படிமுறையாக, விசேட மருத்துவ நிபுணர்களின் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றவுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் சிறுவர்கள் தொடர்பில், விசேட மருத்துவக் குழுவொன்றால் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறுவர்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் தொடர்பில் அவதானிக்கப்படும். வீடுகளுக்குச் சென்ற பின்னர் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படுமாயின், அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்படும் என்று விசேட மருத்துவ நிபுணர் அநுருத்த பாதெனிய தெரிவித்தார்.

தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை, மருத்துவமனைகளுக்குள் மாத்திரம் முன்னெடுக்கவும் ஃபைஸர் தடுப்பூசியை மாத்திரம் சிறுவர்களுக்கு ஏற்றவும், விசேட மருத்துவ நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.

வைரஸை விட வேகமாக, கட்டுக்கதைகள் பரவுகின்றன. அவ்வாறான கட்டுக்கதைகள், பெரும் விளைவுகளை ஏற்படுத்தும். சிறுவர்களுக்கான தடுப்பூசி ஏற்றல் என்பது, எமது சமூகத்தில் மிகவும் உணர்ச்சிமயப்பட்ட விடயம், அதனால், மருத்துவர்களைப் போன்றே ஊடகங்களும், மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்.

**சிறார் விருத்திக்கு பெரும் பாதிப்பு**

இணையவழிக் கல்வியின் ஊடாக, சிறுவர்களின் வெளித்திறன் அபிவிருத்திக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டிய சிறுவர் நோயியல் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் பேராசிரியர் பூஜித்த விக்கிரமசிங்க, பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அறிவாற்றல் குறைந்த பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவது குறித்து பெற்றோர் அச்சம் கொண்டுள்ளனர். இதனால், கல்வியைப் பெறுவதற்கு உள்ள சம உரிமை, அந்தச்சிறுவர்களுக்குக் கிடைக்காமல் போகும். அவ்வாறான நிலைமையை, தடுப்பூசி ஏற்றலின் ஊடாகத் தவிர்த்துக்கொள்ள முடியுமென்றும் கூறினார். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## தமிழில் வரும் ...

விவாதத்துக்கு எடுத்த தவிசாளர், குறித்த கடிதம் சிங்கள மொழியில் உள்ளது. இதனை ஒரு மென்பொருள் மூலம் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளோம் என்று தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புத்தெரிவித்த சபை உறுப்பினர்கள், இனிமேல் சபைக்கு வரும் கடிதங்கள் தமிழ் மொழியிலேயே பெறப்படவேண்டும் என்று கோரிக்கையை முன்வைத்தனர். மேலும் சிங்கள மொழியில் வரும் கடிதங்களைத் திருப்பி அனுப்புவது என்றும் உறுப்பினர்கள் தீர்மானித்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஜீவன், தமிழ் மொழியில் தமிழ் உணர்வுக்கு அப்பால் உறுப்பினர்களுக்கு சிங்கள மொழியில் போதிய தெளிவின்மை உள்ளது. எனவே, குறித்த கடிதங்களை தமிழ் மொழியில் பெறவேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்குப் பதில் கருத்துத் தெரிவித்த சங்கானை பிரதேச ஈ.பி.டி.பி. உறுப்பினர், ஏன் தமிழ் மொழியில் பெற வேண்டும்?. அதற்குப் பதிலாக இங்குள்ள மொழிபெயர்ப்பாளர்கள் மூலமாக மொழி பெயர்க்கலாம் என்றார். இதற்கு சக உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட தவிசாளர், இனிமேல் அரசு மூலமாக வரும் அனைத்துக் கடிதங்களும் தமிழ் மொழியில் வந்தால் மாத்திரமே நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இலங்கை அரசமைப்பில் தமிழ்மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மொழி. எனவே, தமிழ் மொழியிலேயே இனிமேல் கடிதங்களைப் பெறுவது என்றும் இது தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவிப்பது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-10,319)

## ஐநாவில் ...

தடுத்தார்கள். நீதிமன்றத் தடை உத்தரவு இருக்கின்றதா? என்று அவர்களிடம் கேட்டேன். ஆனால் அவர்கள் நீதிமன்ற தடையுத்தரவைக் காண்பிக்கவில்லை. நீதிமன்ற தடையுத்தரவை நாங்கள் மதிக்கிறோம்.

ஆனால், எங்கள் உரிமையை மீறும் உங்களது செயலை ஏற்கமுடியாதென்று தெரிவித்தேன்.

நினைவிடத்துக்கு உள்ளே செல்ல அனுமதிக்காத நிலையில், நினைவிடத்துக்கு முன்பாக நான் நின்ற இடத்திலேயே சுடரேற்றியபோது அங்கு இருந்த பொலிஸார் மிலேச்சத்தனமாக காட்டுமிராண்டித்தனமாக எங்களுடைய மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அதனை தட்டி அணைத்தார்கள். அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். நினைவுகூரும் உரிமை எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்போம் என்ற போர்வையில் தமிழர்களை அடக்கி ஒடுக்கி சிங்கள பௌத்த மேலாண்மையை நிறுவ இங்கிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எந்தவோர் இடத்திலும் தமிழர்களுடைய உணர்வுகளை மதித்து செயற்பட அவர்கள் தயாராக இல்லை.

தனி ஒருவனாக நான் அந்த இடத்துக்குச் சென்றால்கூட சட்டத்தை மீறினேன் என்று சித்தரிக்கப்படுகின்றது. ஆனால், சிறைச்சாலைக்குள் சென்று கைத்துப்பாக்கியை தலையில் வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. என்றார். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைக்கு நேற்று முறையான கவனிப்பு

## கொல்கத்தா எழுச்சி வெற்றி

டுபாய், செப். 24

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையைத் தோற்கடித்து எழுச்சியான வெற்றிபெற்றது கொல்கத்தா அணி. கொல்கத்தாவின் இந்த வெற்றியை அடுத்து மும்பை புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடத்துக்குள் இருந்து பின்தள்ளப்பட்டது.



முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு ஆரம்ப வீரர்களான ரோகித், குயின்டன் இருவரும் அற்புதமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைப் பெற்றது மும்பை. அணி 78 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். எனினும் சூரிய குமார், இசான் கிசான் இருவரும் அணியைச் சரிவுக்குள் தள்ளினர். 5 ஓட்டங்களுடன் சூரிய குமாரும் 14 ஓட்டங்களுடன் இசான் கிசானும் ஆட்டமிழந்தனர். அரைச்சதம் கடந்த குயின்டன் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மும்பையின் ஓட்டக்குவிப்பில் தொய்வு ஏற்பட்டது. முடிவில் 6 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களையே மும்பையால் பெறமுடிந்தது.

பந்துவீச்சில் போர்குசன், பிரதிப் கிருஷ்ணா இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு பலமான அத்திபாரத்தை அமைக்கும் வகையில் கில் மற்றும் வெங்கடேஸ் விளையாடினார்கள். அதிலும் சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்து மும்பையின் மனோநிலையைச் சிதைத்தார் கில். வெங்கடேஸ் அதன் பின்னர் அதிரடி காட்டினார். மும்பையின் முதன்மைப் பந்துவீச்சாளர்கள் நேற்று இலக்குவைக் கப்பட்டமை கூடுதல் சுவாரஸ்யம். பந்துப்பரிமாற்றத்துக்கு 11க்கும் குறையாத சராசரியில் விளையாடியது கொல்கத்தா. அணி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கில் ஆட்டமிழந்தார். வெங்கடேஸுடன் இணைந்து திரிபாதியும் மிரட்டினார். கையாலாகாத நிலைக்கு மும்பை தள்ளப்பட்டது. 53 ஓட்டங்களுடன் வெங்கடேஸ் ஆட்டமிழந்தாலும் திரிபாதியின் பயமற்ற மனோநிலையை ஊடுருவி வெற்றி பெற மும்பையால் முடியவில்லை. இலகுவான வெற்றியைப் பதிவுசெய்தது கொல்கத்தா.

(ம)


## வீடு வாடகைக்கு

ஆவரங்கால் சந்தை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

076 303 4064

## வேலையாள் தேவை

றோல் செய்வதில் சிறந்த அனுபவம் மிக்க 50 வயதிற்குட்பட்ட பெண் வேலையாள் தேவை. (வடமராட்சியை சேர்ந்தவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 075 099 5457

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)
ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

076 221 2037, 077 288 0152
076 734 1023

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சு றோட்) பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப்பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333


# ஆப்கான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவி நீக்கப்பட்டார்!

## தலிபான்கள் திடீர் நடவடிக்கை


காபூல், செப். 24

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமை நிர்வாகி யான ஹமீட் ஷென்வாரி தலிபான்களால் பதவி நீக்கப்பட்டார்.

ஆப்கானிஸ்தானில் அஸ்ரப் கானியின் அரசு ஆட்சியில் இருந்தபோது நியமிக்கப்பட்ட திணைக்களத் தலைவர்களை தலிபான்கள் பதவிநீக்கி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே தற்போது இந்தப் பதவி நீக்கமும் அமைந்துள்ளது. ஹமீட் ஷென்வாரிக்குப் பதிலாக புதியவரொருவர் நியமிக்கப்பட்டார். அவர் தலிபான் ஆதரவு நிலைப்பாடுடையவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

# மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 12 . 1934

இறப்பு 22 . 09 . 2021

## சுப்பையா பொன்னம்பலம்

(ஓய்வூதியர், தபால் திணைக்களம்)

யாழ் நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னம்பலம் அவர்கள் 22.09.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பீதாம்பரம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இலக்குமிதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மரஞ்சினி (ஓய்வு பெற்ற ஆசிரியை), Dr.லோகநாதன் (லண்டன்), சுகிர்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண விவசாய திணைக்களம்), காலஞ்சென்ற கமலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகராஜன் (ஓய்வூதியர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை), Dr.சத்தியபாமா(லண்டன்), சுபாசினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், DATC) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி (Oxford University, London ), மேனன் (Cambridge university, London), தினுஷியா (இந்து மகளிர் கல்லூரி), அஜந்திகா (வேம்படி மகளிர் கல்லூரி), தீபிகன் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.09.2021 அன்று நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முந்திரிகை தோட்டம்
தோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# பாடம் கற்கவில்லை; ராகுல் ஏமாற்றம்!

டுபாய், செப். 24

**ஐ.பி.எல். தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணி எதிர்பாராவிதமாகத் தோல்வியடைந்தது.**

இந்தத் தோல்வி தொடர்பில் கருத்துத் தெரிவித்த அந்த அணியின் தலைவர் ராகுல், கடந்த கால தோல்விகளில் இருந்து எமது வீரர்கள் பாடம் கற்கவில்லை - என்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முந்தைய தவறுகளில் இருந்து நாங்கள் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. இனி வரும் 5ஆட்டங்களில் நாங்கள் வெற்றி



பெற முயற்சிப்போம். சிறப்பாக ஆடியும் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற முடியாமல் தோல்வியைத் தழுவியமை ஏமாற்றம் [illegible] என்றார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org